DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.228/2021**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இளங்கோவன் | | : |
| த/பெ | : மகாலிங்கம் | மதம் | : |
| கிராமம் | : முகப்பேர் | தொழில் | : வியாபாரம் |
| வட்டம் | : சென்னை | வயது | : 57/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 03.02.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>: PW1**

1. நான் தாக்கல் செய்த பு.சா.ஆ.6 தமிழ்நாடு General Sales Tax சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் என்றால் சரிதான். 01.01.2007 தேதிக்கு பிறகு தமிழ்நாடு General Sales Tax சட்டம் அமலில் இல்லை தமிழ்நாடு மதிப்பு கூட்டுவரி சட்டம் அமலுக்கு வந்தது என்றால் சரிதான். 01.01.2007 தேதிக்கு பிறகு நான் நடத்தி வந்த நிறுவனம் தமிழ்நாடு மதிப்பு கூட்டுவரி சட்டத்தின் நடத்தி வந்ததற்கான ஆவணம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். Form D ஆவணத்தின் நகல் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அதன் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நகலுடன் சரிபார்க்கவில்லை என்றால் சரிதான். 2005 ஆம் ஆண்டிலிருந்து வணிகவரி துறை தனியார் ஆக்கப்பட்டதால் Form D படிவத்தை வழங்கப்பட்டது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. பு.சா.ஆ.6 ஆவணத்தின் முதல் பக்கத்தின் உள்ள எனது நிறுவனத்தின் முகவரியும் இறுதி பக்கத்தில் உள்ள எங்கள் நிறுவனத்தின் முகவரியும் வெவ்வேறாக காணப்படுகிறது என்றால்

சரிதான். பு.சா.ஆ.6 ஆவணத்தின் 3ம் பக்கத்தின் உள்ள புகைப்படம் போலியாக புனையப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. எனவே பு.சா.ஆ.6 ஆவணத்தில் 3ம் பக்கம் நகல் என்பதாலும் புகைப்படம் சரியான முறையில் இல்லை என்பதால் அந்த ஆவணம் நீதிமன்றத்தால் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. பு.சா.ஆ.7 Delivery Challan 3 எண்ணிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2. அதில் உள்ள முதல் Invoice No.0262 பெங்களூரில் உள்ள AKM நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 12% VAT வரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். AKM நிறுவனம் கர்நாடகா மாநிலத்தில் உள்ளது என்றால் சரிதான். தமிழ்நாட்டில் இருந்து வேறு மாநிலத்திற்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது VAT வரி விதிக்கப்படாது Central Sales Tax ன் படி தான் வரி விதிக்கப்படும் என்றால் சரிதான். ஆகையால் AKM நிறுவனத்தின் பெயரில் உள்ள Invoice ஆனது வழக்கிற்காக போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த 3 Invoice ம் சென்னையில் இருந்து சுமார் 300 கிலோமீட்டர் தொலைவில் உள்ள நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட பொருட்களுக்கான Invoice என்றால் சரிதான். அதில் எந்த Invoice ரசீதுடனும் லாரி ரசீது இணைக்கப்படவில்லை என்றால் சரிதான், முகவர் மூலம் தான் பொருட்கள் அனுப்பப்படுவதால் அதை குறித்து அவர்களுக்கு தான் தெரியும். நான் தாக்கல் செய்த பு.சா.ஆ.7 ஆவணத்தில் Ex-Factory என்ற வார்த்தை காணப்படுகிறதா என்றால் இல்லை. பு.சா.ஆ.7 ஆவணத்தில் எங்கும் லாரியின் பதிவெண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2014-2015 ல் VAT வரிச்சட்டம் தமிழ்நாட்டில் அமலில் இருந்து வந்தது என்றால் சரிதான். VAT வரிச்சட்டத்தின் கீழ் மாதந்தோறும் TAX Returns தாக்கல் செய்யப்படும் என்றால் சரிதான். VAT Returns ல் எனது

வாடிக்கையாளர்களின் பெயர் மற்றும் நிறுவனம் இதர விவரங்கள் அதில் குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். பு.சா.ஆ.7 Invoice உண்டான மாதந்தோறும் VAT Returns–ஐ இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. பு.சா.ஆ.7 ஆவணங்கள் அத்தனையும் வழக்கிற்காக போலியாக ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

3. கூடுதல் ஆவணங்கள் அனைத்தும் உண்மையாக இருந்திருந்தால் Invoice ரசீதுடன் மாதந்தோறும் செலுத்தப்பட்ட VAT Returns தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாததால் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள தேதி என்னவென்றால் 15.04.2013 ஆகும். அந்த ஆவணம் ரூ.4,00,000/– த்திற்கு கிரைய தொகை பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரூ.4,00,000/– த்தை 2 வருடமாக வீட்டில் ரொக்க பணமாக வைத்து எதிரிக்கு கடன் தருவதற்கு பயன்படுத்தியுள்ளேன் என்று சொல்வது நம்பக்கூடியதல்ல என்றால் சரியல்ல. மேற்படி ரூ.4,00,000/– த்தை எந்த வங்கியிலும் போட்டு வைக்கவில்லை என்றால் சரிதான். பு.சா.ஆ.9 காசோலை எதிரியால் பூர்த்தி செய்யப்பட்டது கிடையாது என்றால் நான் தான் எழுதினேன். பு.சா.ஆ.9 காசோலை ரூ.2,50,000/– தரப்பட்டது என்றால் சரிதான். பு.சா.ஆ.9 காசோலையானது இவ்வழக்கு காசோலைக்கு முன்பாக தரப்பட்ட காசோலை என்றால் சரிதான். இவ்வழக்கில் கோரியுள்ள தொகை உண்மையாக இருந்திருந்தால் பு.சா.ஆ.9 காசோலையில் முழுத்தொகையும் பூர்த்தி செய்திருப்பேன் என்றால் எதிரி கூறியதின் பேரில் அவ்வாறு எழுதினேன். எனது முந்தைய குறுக்கு விசாரணையில் Tax Assessment office, Ayanavaram என்று தெரிவித்திருந்தேன் தற்பொழுது பு.சா.ஆ.6 ஆவணத்தில் Tax Assessment office, Ambattur என்றால் அது மண்டலம் ஆகும். சான்றிதழ் அம்பத்தூர் அலுவலகத்தில் பெறப்பட்டது,

அதற்கான அலுவலகம் அயனாவரத்தில் உள்ளது. பு.சா.ஆ.6 ஆவணத்தில் Tax Assessment office, Ambattur No.5, High court colony, வில்லிவாக்கம், சென்னை–49 என்று காணப்படுகிறது என்றால் சரிதான். நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதால் நான் நம்பக்கூடிய சாட்சியம் அல்ல என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததற்கு எந்த ஆவணமும் இல்லை என்றும், காசோலை பெற்றதற்கும் சரியான ஆவணம் இல்லை என்றும், எதிரி என்னிடம் ரூ.25,00,000/– கடன் பெற்றதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வேறு காரணத்திற்காக என் வசம் கிடைத்த எதிரியின் காசோலையை தவறான முறையில் பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K